4. விதி 110-ன்கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்–தொடர்ச்சி

தமிழகத்தில் பூண்டி நீர்த்தேக்கத்திற்கு கிருஷ்ணா நதி நீர் வரத்து பற்றிய பொதுப்பணித் துறை அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அனுமதி வழங்கப்படுகின்றது. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

*** மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக, ஆந்திர மாநில அரசுகளுக்கிடையே 18-4-1983 அன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, ஆந்திர அரசினரால் ஸ்ரீ சைலம் அணையிலிருந்து ஆண்டுதோறும் 15 டி.எம்.சி. தண்ணீர் எடுக்கப்பட்டு, அதில் 3 டி.எம்.சி. இழப்புப் போக, ஜூலை மாதம் முதல் அக்டோபர் மாதம் முடிய 4 மாதங்களில் 8 டி.எம்.சி.யும் அடுத்த ஜனவரி முதல் ஏப்ரல் முடிய 4 மாதங்களில் 4 டி.எம்.சி.யும், ஆக மொத்தம் 12 டி.எம்.சி. கிருஷ்ணா நீர் தமிழக எல்லையில் தரப்பட வேண்டும்.

அதன்படி, கண்டலேறு பூண்டிக் கால்வாயில் வேலைகள் முடிக்கப்பட்டு, 1996 ஆம் ஆண்டு செப்டம்பர் 29 ஆம் நாள் முதல் அக்டோபர் 16ஆம் நாள் வரை மொத்தம் 76.37 மில்லியன் கன அடித் தண்ணீர் வந்து சேர்ந்தது. அதன்பின், பெருமழை, வெள்ளத்தால் ஏற்பட்ட பெரும் சேதங்களைச் சரி செய்து, 1997 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4 ஆம் நாள் மீண்டும் கிருஷ்ணா நீர் தமிழக எல்லைக்கு வந்தது.

ஆந்திர—தமிழக எல்லையில் உள்ள தாமரைக்குப்பம் கிராமத்திலிருந்து கிருஷ்ணா நீர், பூண்டி நீர்த்தேக்கத்திற்கு வந்தடைந்ததை, 16-7-1997 அன்று என்னுடன் பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சி நிறுவனத்தினர் ஆகியோர் வந்து பார்வையிட்டனர்.

4-7-1997 முதல் 23-11-1997 வரை பூண்டி நீர்த்தேக்கத்திற்கு 2.09 டி.எம்.சி. கிருஷ்ணா நீர் வந்து சேர்ந்தது. 1997-ல் பெய்த பருவமழை காரணமாக, பூண்டி, புழலேரி மற்றும் சோழவரம் ஆகிய ஏரிகள் முழு மட்ட அளவிற்கு நிரம்பியதால் கிருஷ்ணா நீர் வரத்து நிறுத்தப்பட்டது.

1998 ஏப்ரல் 3] [திரு. துரைமுருகன்]

பிற்பகல் 12-25

இதற்கிடையில் 18-.11-1997 அன்று ஐதராபாத்தில் நடைபெற்ற 35-ஆவது உயர்மட்டத் தொடர்புக் குழுக் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி, கண்டலேறு பூண்டிக் கால்வாயில் ஏற்பட்டுள்ள பெரும் நீர்க் கசிவினைத் தடுப்பதற்காக ரூ.44.21 கோடி செலவில் Concrete Lining வேலைகள் மற்றும் சீரமைப்புப் பணிகளைச் செய்து முடித்து, ஜூலை 1998-ல் கிருஷ்ணா நீர் சென்னைக்கு மறுபடியும் அனுப்பப்பட முடிவு செய்யப்பட்டது. அதன்படி பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, கண்டலேறு பூண்டிக் கால்வாயில் பல இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

10-3-1998 ஆம் தேதி ஆந்திர மாநிலத் தலைமைச் செயலாளர் கடிதத்தின்படி, ரூ.44.21 கோடி செலவில் கண்டலேறு பூண்டிக் கால்வாயில் நடைபெறும் சீரமைப்பு வேலைகளின் முன்னேற்றம், மேல் மட்ட ஆய்வு செய்யப்பட்டு, கண்டலேறுக் கால்வாயில் முக்கியமான பணிகள் முடிக்கப்பட்டு, ஏற்கெனவே அனுப்பப்பட்ட வினாடிக்கு 300 கன அடி என்பதற்கு மாறாக சீரமைப்புக்குப் பின், வினாடிக்கு 500 கன அடி அளவில் உயர்த்தி, இவ்வாண்டு ஜூலை முதல் வாரத்தில் கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஃதன்னியில், கிருஷ்ணா நதிநீர்க் கால்வாயில் Concrete Lining பணிகளுக்கான ஒப்பந்தங்கள் கோருவதில், சில நடைமுறை மாற்றங்கள் செய்யப்பட்டபோது ஏற்பட்ட காலதாமதத்தினால் வேலைகள் உரிய நேரத்தில் துவங்கப்பட முடியவில்லை. இவ்வேலைகளை முழுவதுமாகச் செய்து முடிக்க 5 மாதங்கள் பிடிக்கும் என்கின்ற காரணத்தினால், அவ்வேலைகள் அடுத்த ஆண்டு நீர் வரத்து அனுப்பப்படாத காலத்தில் செய்யப்படும்.

சென்னைப் பெருநகருக்குக் குடிநீர் வழங்கும் 3 ஏரிகளில் தற்போதைய, 2-4-1998 அன்றைய நிலவரப்படி நீர் இருப்பு விவரம் பின்வருமாறு:

பூண்டி	-	2,006 மி.கன அடி
புழலேரி	-	2,277 மி.கன அடி
சோழவரம்	-	412 மி.கன அடி

மொத்தம் 4,695 மி. கன அடி அல்லது 4.7 டி.எம்.சி.

[திரு. துரைமுருகன்] [1998 ஏப்ரல் 3

இதில் பயன்படுத்த இயலாத அடிமட்ட அளவான 0.7 டி.எம்.சி போக, மீதம் சுமார் 4 டி.எம்.சி. தண்ணீர் விநியோகத்திற்கு உள்ளது. சென்னைக் குடிநீருக்காக புழலேரியிலிருந்து வினாடிக்கு 145 கன அடி தண்ணீர் எடுக்கப்படுகிறது. இந்த அளவின்படி, ஒரு மாதத்திற்கு 376 மி. கன அடி செலவாகும். இத்துடன் ஆவியாதலால் ஏற்படும் இழப்பைச் சேர்த்து 750 மி. கன அடி ஒரு மாதத்திற்கு மொத்தத் தேவையாகும். ஆகவே, இன்றையதினம் இருப்பில் உள்ள 4.00 டி.எம்.சி. நீரைக் கொண்டு 160 நாட்களுக்குக் குடிநீரை வழங்க முடியும். அதாவது, இருக்கின்ற தண்ணீர் ஆகஸ்டு திங்கள் இறுதி வரை வரும்.

போதிய அளவு தண்ணீர் கண்டலேறு நீர்த்தேக்கத்தில் இருக்கின்ற படியால் கிருஷ்ணா நதி நீர் ஒப்பந்தப்படி 1998 ஜூலை முதல் வாரத்தில் தண்ணீர் வழங்க ஆந்திர அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதனையும், நம்மிடம் உள்ள இருப்பையும் கணக்கிட்டுப் பார்த்தால் சென்னை மாநகருக்குக் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு Clarification Sir.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: Clarification எதுவும் கிடையாது. விதி 110-ன் கீழான அறிக்கையில் எந்த விவாதமும் கிடையாது.

5. வரவு-செலவுத் திட்டம், 1998-99, பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. த. பூவேந்தன்.

திரு. த. பூவேந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் நடைபெறும் விவாதத்தில் கலந்து கொண்டு இங்கே பேச வாய்ப்பளித்தற்காக நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-30

இந்த வரவு-செலவுத் திட்டத்தை, 14 வயதில் இருந்து தமிழ்ச் சமுதாயத்திற்காக, தமிழ் மொழிக்காகப் பாடுபடுகின்ற, நாடு முழுக்க பட்டிதொட்டிகளிலும், பட்டணத்திலும் உள்ள அத்தனை மக்களுக்காக அல்லும், பகலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கின்ற மூதறிஞர் முதலமைச்சர் அவர்கள் 10 ஆவது நிதிநிலை அறிக்கையாக இங்கே